*சிறுகதை : மயக்கமா? கலக்கமா?*

மாலை நேரம். கதிரவன் தன் இளங்கதிர்களை எங்கும் பரப்பி மகிழ்ந்துகொண்டிருந்தான். இயற்கை வரைந்துவிட்ட ஓவியம்போல் காட்சியளித்த ஈஸ்ட் கோஸ்ட் கடற்கரையில் மக்கள் வெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது. சிறுவர் சிறுமியர் மணல் கோட்டை கட்ட, பெரியோர்களோ மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தனர்.

இந்த இயற்கை சூழலை விட்டு விலகி தனியே இருவர் அமர்ந்திருந்தனர். இளம் காதல் ஜோடி. அவர்களுக்கிடையே மௌனம் சூழ்ந்திருந்தது. சாரதாவின் முகத்தை கூர்ந்து கவனித்தான் பரத். அவளது தோற்றத்தில் இளமையின் நளினம் சுடர்விட்டிருந்தது. வானில் மின்னும் நட்சத்திரம்போல் அவளுடைய கண்கள் மின்னினாலும் ஏனோ கலவரம் அவளது முகத்தில் படர்ந்திருந்தது. அவளது கண்களில் கண்ணீர் துளிகள் அரும்பியிருந்தன. அங்கு நிலவிய மௌனத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இருந்த பரத், அதனைக் கலைத்தான்.

“இங்க பாரு, சாரதா, இத்தன நாளு பழகியுமா என்னை நீ புரிஞ்சிக்கல, உன்னோட நலனுக்காகத்தான் சொல்லுறேன், உன்னை நான் ஏமாத்த நினைக்கல” அவன் முடிக்கு முன், “போதும், நிறுத்துங்க!” என சப்தமிட்டாள்.

சற்று நேரம் அவர்களுக்கிடையே மீண்டும் அமைதி நிலவியது.

“என்னை உங்களுக்கு பிடிக்கலேன்னா முன்னமேயே சொல்லியிருக்கனும், எனக்கு அழகில்லையா? படிப்பில்லையா?” அவள் அடுக்கிக்கொண்டே போனாள் ஆனால் அவை பரத்தின் செவிகளை எட்டவில்லை.

அவளது கொந்தளிப்பு அவனுக்கு புரிகிறது ஆனால் அவனது சூழ்நிலை அவளுக்கு புரியவில்லையே!

பரத், சாரதா இருவரும் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது நண்பர்களானார்கள். அங்கு தமிழ் கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, இருவரும் நெருங்கி பழக ஆரம்பித்தார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அவர்களின் காதல் வளர்ந்தது. கலையின் மேல் அவர்களுக்கு இருந்த பற்று, அவர்களையும் நெருக்கி காதல் எனும் பூவை மலர வைத்தது. இருவரும் பல்கலைக் கழக படிப்பை முடித்துவிட்டு அவரவர் இஷ்டப்படி வேலையிலும் சேர்ந்துவிட்டனர். பரத் ஒரு தனியார் நிறுவனத்தில் நிர்வாகியாகவும், சாரதா அரசாங்க மருந்தகத்தில் அதிகாரியாகவும் வேலைக்குச் சேர்ந்தனர்.

எல்லா வகையிலும் ஒத்துப்போனவர்களை அவர்களது குடும்பத்தினர் சேர்த்து வைக்க எண்ணி கல்யாண ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இரு மணம் கலந்தால் திருமணம்தானே! கல்யாண நாளும் குறித்தாகிவிட்டது. இந்நிலையில்தான் இவர்களது வாக்குவாதம்.

சாரதா மீண்டும் தொடர்ந்தாள். “பரத், ஏன் இந்த திடீர் முடிவு? காரணத்தையாவது சொல்லுங்க” அவள் மன்றாடினாள்.

பரத் ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால் பேச நா எழவில்லை. பின்னர் சுதாகரித்துக்கொண்டு ‘‘சாரதா, உன் நலனுக்காகத்தான் சொல்றேன்’’ என ஆரம்பித்தான்.

“என் நலம், என் நலம்னு சொல்றீங்களே, அதை நம் நலன்னு சொல்லக்கூடாதா?’’ என குறுக்கே வெட்டினாள் சாரதா.

‘‘அது முடியாது சாரதா, இனிமே என்னைப்பற்றி கவலைப்படவேண்டாம்’’ என்று விரக்தியோடு பதிலளித்தவனை சற்று உற்று நோக்கினாள் சாரதா.

பரத்தின் முகத்தில் ஏதோ ஒருவித கலவரம் சூழ்ந்திருப்பதை உணர்ந்தாள். அதை மறைக்க அவன் முயல்வதையும் அவள் புரிந்துக்கொண்டாள்.

‘‘சாரதா, என்னை மறந்துட்டு, வேறொரு கல்யாணம் செய்துக்க’’ பரத் தொடர்ந்தான்.

அவனது வார்த்தைகளில் எந்தவொரு உணர்ச்சியும் இல்லாமலிருந்தது. சாரதா அதிர்ந்துபோனாள். சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது. ஊசி விழுந்தால் கேட்கும் என்பார்களே, அது போன்ற ஓசையற்ற நிலை.

பரத் மீண்டும் தொடர்ந்தான். ‘‘சாரதா’’, அவனுடைய நா தழுதழுத்தது. ‘‘நான் உன்னை ஏமாத்த நினைக்கல, நீ இன்னொருத்தரை கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்லா இருக்கணும், அதுதான் என் ஆசை’’ வார்த்தைகளை நிறுத்தி நிதானமாக சொல்ல முற்பட்டான்.

‘‘ஒரு பெண்ணோட மனசுல ஒருவனுக்கு இடம் கொடுத்துட்டு வேறொருவனுக்கு அதில் பங்கு கொடுக்கமாட்டாள், இதை நீங்க புரிஞ்சிக்கணும்’’. அவள் பேசியது சினிமா வசனம்போல் இருந்தாலும் அவை அவளது உள்ளத்தின் அடியிலிருந்து வெளிவந்திருப்பதை உணர முடிந்தது.

தன் காதலில் இவ்வளவு பிடிவாதமாக இருக்கும் சாரதாவிடம் இனி உண்மையை மறைப்பது சரியில்லை என்பது பரத்துக்கு புரிந்தது. அவன் பேச எத்தனித்தபோது, சாரதா மீண்டும் கெஞ்சினாள்.

‘‘நான் ஏதாவது தவறு செய்திருந்தால், சொல்லுங்க, நான் திருத்திக்கிறேன், ஆனா’’ அவள் சிறு பிள்ளைபோல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

சாரதாவின் நிலைக்கண்டு பரிதவித்துப்போனான் பரத். ‘‘அழாதே, சாரதா, அழாதே’’ என சாரதாவின் தோள்களை பற்றி தேற்றினான்.

அவனை ஏறிட்டுப் பார்த்தாள் சாரதா. பரத்தின் வாயோரத்தில் இரத்தம் கசிவதை கண்டு திடுக்கிட்டாள்.

“பரத, உங்க வாயில இருந்து” அவள் முடிக்கவில்லை.

“ஒன்றுமில்லை” என கூறியவாறே அவன் கீழே சரிந்துதான்.

“பரத, பரத், உங்களுக்கு என்ன ஆச்சு, பரத்.. பரத்...”

சாரதா துடிதுடித்துப்போனாள். அவனை தன் மடியில் கிடத்தி தன்னால் இயன்ற பணிவிடைகளை செய்தாள். இப்படிப்பட்ட பணிவான அன்புமிக்க மனைவியை அடைய அவன் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆனால் பரத் ஏன் அவளை திருமணம் செய்துக்கொள்ள மறுக்கவேண்டும்?

கதவை உட்புறமாகத் தாழிட்டு, விளக்கை அணைத்து விட்டுத் தன் படுக்கையில் விழுந்ததாள். இரவு நெடு நேரம் தூக்கம் வராமல் தவித்தாள் சாரதா. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். அவளது கண்களில் தினமும் மின்னும் ஜீவ துடிப்புகள் இப்பொழுது இல்லை. முகம் வெளுத்து வாடிப்போயிருந்தது. பரத்தை பரிசோதித்த மருத்துவர் கூறிய வார்த்தைகள் அவளை வாட்டியது. அது உண்மையாக இருக்கக்கூடாது என்றுதான் வேண்டினாள். ஆனால் மற்றொரு மருத்துவரும் அதை உறுதிப்படுத்திவிட்டாரே! மருத்துவரை சந்தித்துப் பேசியது அவள் கண்முன் திரைப்படம்போல் நிழலாடியது.

“நீங்க அவருடைய மனைவியா ஆகப்போறதாலே உங்ககிட்ட பரத்தோட நிலைய சொல்றேன், அவருக்கு தொண்டை புற்றுநோய் ஏற்பட்டிருக்கு”.

“டாக்டர், அவரு மது குடிக்கமாட்டாரு, சிகரெட்டும் தொடமாட்டாரே, பின்ன..”

“நோய் எந்த ரூபத்துலயும் வரலாம், நீங்க மருந்தகத்துல வேலை செய்யுறீங்க, உங்களுக்கு தெரியாததா, ஏன் எப்படி இந்த நோய் வருது? யாராலேயும் எளிதா பதில் சொல்ல முடியாது.

“அவருக்கு எந்த வலியும் இருந்ததா எனக்கு தெரியலேயே.”

“ஆரம்ப கட்டத்துல எந்த வலியும் இருந்திருக்காது, நாக்கு மறத்து போயிருக்கலாம், குரல் மாறி இருக்கலாம, சாதாரண பல்வலியாகூட இருந்திருக்கலாம்”

“எனக்கிட்டே அப்படி எதுவும் சொன்னதில்ல”

“நாங்க பயோப்சி, சி டி ஸ்கான் எடுத்து ஆய்வு செய்த பிறகுதான் இந்த நோய்னு உறுதி செய்திருக்கிறோம்”.

“இந்த நோய்க்கு தீர்வு...”